ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2213/40 - 2021 පෙබරවාරි මස 03 වැනි බදාදා - 2021.02.03

*2213/40 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 10/2017* (III)

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

*31 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஆட்கள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கத்துக்காக இலங்கையில் வதிபவர்களாகவிருத்தல் வேண்டுமென 2021, மாச்சு 22 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தொழிற்படுத்தப்படும் இக்கட்டளைமூலம் தீர்மானிக்கின்றேன்.*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளை, அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

கொழும்பு,
*2021, பெப்புருவரி 03.*

1A - G 33648 — 60 (2021/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

1. எவரேனும் இலங்கைப் பிரசை அல்லது இலங்கைப் பிரசையொருவரைத் திருமணஞ்செய்துள்ள எவரேனும் வெளிநாட்டுப் பிரசை, முற்போந்த பன்னிரெண்டு (12) மாதங்களின்போது கூட்டுமொத்தத்தில் நூற்றியெண்பத்திமூன்று (183) நாட்களைக் கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் இருந்திருப்பின் அத்தகைய ஆள்.

2. (அ) முற்போந்த பன்னிரெண்டு 12 மாதங்களின்போது கூட்டுமொத்தத்தில் நூற்றியெண்பத்திரெண்டு (182) நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு, விடுமுறை, கல்வி, வியாபாரம், மருத்துவச் சிகிச்சை என்பவற்றுக்காக அல்லது வேறேதேனும் ஒத்த காரணத்துக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாகச் சென்றுள்ளவரான;

(ஆ) வேறொரு நாட்டினால் வழங்கப்பட்ட மாணவ அல்லது அதற்குச் சமமான விசாவொன்றின்மீது மற்றும் அத்தகைய கற்கைகள் பூர்த்திசெய்யப்பட்டதன்மேல் நூற்றியெண்பத்திரெண்டு (182) நாட்களுக்கு மேற்படாத மேலதிகக் காலப்பகுதியொன்றுக்கு இலங்கைக்கு வெளியே சென்றுள்ளவரான,

எவரேனும் இலங்கைப் பிரசை.

3. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்க நிறுவனங்கள், நியதிச்சட்ட முறையான சபைகள், அரசாங்க முகவராண்மைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான வேறெவையேனும் உருவகங்கள் உள்ளடங்கலாக இலங்கை அரசாங்கம்.

4. (அ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கை அரசாங்கத்தின் (எத்தகையதுமான எப்பெயரினாலும் அல்லது தலைப்புப்பெயரினாலும் பெயர்குறிக்கப்பட்ட) தூதுவப் பிரதிநிதிகள், தூதர்கள் அல்லது வியாபார ஸ்தானிகர்கள்;

(ஆ) விசா வழங்கும் அதிகாரியினால் விசா பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனுமாள் மேலே பந்தி 4 இன் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆளின் பணியாட்டொகுதியுறுப்பினராகவிருந்தால் அவர்;

(இ) வெளிநாட்டில் ஆட்சேர்க்கப்பட்டவர்கள் தவிர, வெளிநாட்டில் சேவையாற்றுகின்ற ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின், ஓர் அரசாங்க நிறுவனத்தின், ஒரு நியதிச்சட்டமுறையான சபையின், ஓர் உரிமமளிக்கப்பட்ட வங்கியின் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியின் பணியாட்டொகுதியுறுப்பினரொருவர்;

(ஈ) மேலே 4 ஆம் பந்தியின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் உட்பந்திகளின்கீழ் இலங்கையில் வதிபவராகத் தீர்மானிக்கப்பட்ட எவரேனுமாளின் எவரேனும் குடும்பவுறுப்பினர்.

5. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இயைபான விசாவின்கீழ் இலங்கையில் வதிகின்ற அல்லது தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வெளிநாடுகளின் பிரசைகள், ஆனால் வேறு நாடுகளுக்கு இடைப்பெயர்விலுள்ள பயணிகள் அல்லது உல்லாசத்துக்காக அல்லது வியாபாரத்துக்காக நாட்டில் சுற்றுலாப்பயணத்தை மேற்கொள்கின்ற வருகையாளர்கள் அல்ல.

6. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட பின்வரும் நிறுவனங்களைச் சொந்தமாக வைத்திருக்கின்ற, கட்டுப்படுத்துகின்ற அல்லது முகாமைசெய்கின்ற ஆட்களின் பிரசாவுரிமையினது அந்தஸ்தைப் பொருட்படுத்தாது அத்தகைய பின்வரும் நிறுவனங்கள்:-

(அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள்;

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளுட்பட (வெளிநாட்டு வங்கிகள்) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனிகள்;

(இ) கரைகடந்த கம்பெனிகளாகப் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகள்;

(ஈ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளுட்பட, களரிகள், சங்கங்கள் அல்லது வேறெவையேனும் ஒழுங்கமைப்புக்கள்.

7. இறந்த நேரத்தில் இறந்தவர், அல்லது தீர்த்துவைத்தல் செய்யப்பட்ட நேரத்தில் தீர்த்துவைப்பவர் மேலே 1 முதல் 5 வரையிலான பந்திகளின் நியதிகளின்படி வதிபவராகவிருந்தவிடத்து, அத்தன்மையில் மட்டுமே செயலாற்றும்போது இறுதிவிருப்பாவண நம்பிக்கைப்பொறுப்புகளின் அல்லது வாழ்வோரிடைத் தீர்த்து வைத்தல்களின் வேறொரு நாட்டின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் மரணச் சொத்துக்களின் நிருவாகிகள் அல்லது இறுதிவிருப்பாவணங்களின் நிறைவேற்றுநர்கள்.

*8. 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் பொருளுக்குட்பட, தனியாள் இலங்கைக் கப்பலொன்றில் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற காலப்பகுதியின்போது, அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்படுகின்ற இலங்கைப் பிரசைகள்.*

*9. மேலே 1, 2, 4 அல்லது 7 ஆம் பந்திகளிலுள்ள நிபந்தனைகளைத் திருப்திசெய்யாத இலங்கைப் பிரசைகளாகவுள்ள அல்லது இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தனியாட்கள், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும், கட்டளைகளுக்கும், பணிப்புகளுக்கும் அமைய, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கான நோக்கத்துக்காக மட்டுமே இலங்கையில் வதிபவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*02-392*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.